**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.136/2025**

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரஷ்யா | Husband's Name | : | ஜெயபால் |
| Village | : | தியானபுரம் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 13th day of March 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் தியானபுரத்தில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் வாசன் ஹோட்டலில் வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரி என் மூத்த மகன், இவ்வழக்கில் இறந்த ஜெயராமன் என் இளைய மகன். 11.01.2025 ம் தேதி பக்கத்தில் வசிக்கும் என் மகள் வீட்டிற்கு சென்று படுத்து விட்டேன். மறுநாள் விடியற்காலை நான் வீட்டிற்கு சென்று பார்த்தபோது என் இளைய மகன் ஜெயராமன் வெட்டுபட்டு இறந்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:34:33 +0530

கிடந்தார். அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. இது தொடர்பாக திருவாரூர் தாலுகா போலீஸ் ஸ்டேஷனில் நான் ஒரு புகார் கொடுத்தேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. அதில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது. என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1**. அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் நான் தினமும் காலை 11.00 மணிக்கு வாசன் ஹோட்டலுக்கு வேலைக்கு சென்றுவிட்டு இரவு 11.00 மணிக்கு வீட்டிற்கு திரும்ப வருவேன் எனவும் என்னுடன் என் இளைய மகன் ஜெயராமன் வசித்து வந்தான் எனவும் என் மூத்த மகன் ஜெயராஜிற்கு தனலெட்சுமி என்ற பெண்ணுடன் திருமணமாகி என் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் அவன் மனைவியுடன் தனியாக வசித்து வருகிறான் எனவும் என் இளைய மகன் ஜெயராமனுக்கும் தனலெட்சுமிக்கும் கள்ளத் தொடர்பு இருந்து வந்தது எனவும் ஜெயராஜ் வெளியூருக்கு வேலைக்கு செல்லும் போதெல்லாம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:34:37 +0530

ஜெயராமனும் தனலெட்சுமியும் கணவன் மனைவி போல் இருந்ததை நான் பலமுறை பார்த்திருக்கிறேன் எனவும் இது சம்மந்தமாக இருவரையும் நானும் என் மகளும் பலமுறை கண்டித்தோம் எனவும் 11.01.2025 ம் தேதி இரவு வெளியூருக்கு சென்று வேலை செய்துவிட்டு வீட்டிற்கு வந்த என் மகன் ஜெயராஜூக்கும் ஜெயராமனுக்கும் தகராறு ஏற்பட்டது எனவும் ஜெயராஜூம் அவன் மனைவியும் வீட்டிலிருந்தபோது வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்கு குடிபோதையில் வந்த ஜெயராமன் மறுபடியும் ஜெயராஜிடம் சண்டை போட்டான் எனவும் நான் இருவரையும் சமாதானம் செய்துவிட்டு ஜெயராமனை என் வீட்டிற்கு அழைத்துவந்து படுக்க வைத்துவிட்டு நான் என் மகள் வீட்டிற்கு சென்று விட்டேன் எனவும் நான் மறுநாள் விடியற்காலை 3.00 மணியளவில் என் மகள் வீட்டிலிருந்து என் வீட்டிற்கு வந்தப்ப ஜெயராஜ் இரத்தம் சொட்ட சொட்ட அருவாளுடன் என் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தபோது நான் அவனிடம் என்னடா பண்ண என கேட்டபோது எனக்கு துரோகம் பண்ண ஜெயராமனை வெட்டி கொன்னுட்டேன் இனிமேதான் நான் குடும்பத்தோடு நிம்மதியாக வாழ முடியும் என சொல்லிவிட்டு அருவாளுடன் அவன் வீட்டு பக்கம் சென்றுவிட்டான் நான் அதிர்ச்சியுடன் என் வீட்டில் பார்த்தபோது படுக்கையறையில் ஜெயராமன் கழுத்தில் வெட்டப்பட்டு இரத்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:34:54 +0530

வெள்ளத்தில் கிடந்தான் நான் சத்தம் போட்டு ஓடிசென்று என் மகள் ஜெயாவிற்கும் கிராமத்தில் உள்ளவர்களுக்கும் தகவல் சொல்லிவிட்டு 12.01.2025 ம் தேதி காலை ஜெயராமனை என் மூத்த மகன் ஜெயராஜ் கொலை செய்துவிட்டான் என்று போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்துவிட்டு ஆஜர் எதிரி என் மூத்த மகன் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரியை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:35:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.136/2025**

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயா | Husband's Name | : | முத்து பாக்கியராமன் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 28 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 13th day of March 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூரில் வசித்து வருகிறேன். நான் விளமல் பெட்ரோல் பங்கில் வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்த ஜெயராமன் என் தம்பி, ஆஜர் எதிரி என் அண்ணன். நான் திருவாரூர் தியானபுரத்தில் ஒரே தெருவில் பக்கம் பக்கமாக வசித்து வருகிறோம். கடந்த 11.01.2025ம் தேதி இரவு 11.00 மணியளவில் என் தம்பி ஜெயராமன் இறந்து விட்டார். ஜெயராமன் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:35:06 +0530

போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் என் அம்மா வாசன் ஹோட்டலில் வேலை செய்து வருகிறார் எனவும் என் அண்ணன் ஜெயராஜ் அவர் மனைவி தனலெட்சுமியுடன் தனியாக வசித்து வருகிறார் எனவும் அவருக்கு பக்கத்து வீட்டில் என் தம்பி ஜெயராமன் என் அம்மாவுடன் தனியாக வசித்து வருகிறார் எனவும் ஜெயராமனுக்கு திருமணம் ஆகவில்லை எனவும் என் தம்பி ஜெயராமனுக்கும் என் அண்ணி தனலெட்சுமிக்கும் ஏற்கனவே பழக்கம் எனவும் இது தெரியாமல் ஜெயராஜ் தனலெட்சுமியை காதலித்து திருமணம் செய்து கொண்டார் எனவும் என் அண்ணன் ஜெயராஜ் வெல்டிங் வேலை தொடர்பாக அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவார் எனவும் இதை ஜாதகமாக பயன்படுத்திக் கொண்ட ஜெயராமன் தனலெட்சுமியுடன் கள்ளத் தொடர்பில் இருந்து வந்தான் எனவும் இதை தெரிந்துகொண்ட என் அம்மாவும் நானும் என் மூத்த தம்பி ஜெயபிரதாப்பும் இருவரையும் பலமுறை கண்டித்தோம் எனவும் ஆனால் அவர்கள் இருவரும் இதை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:35:11 +0530

பொருட்படுத்தவில்லை எனவும் இதுபற்றி அரசல் புரசலாக தெரிந்த என் அண்ணன் ஜெயராஜ் தனலெட்சுமியை கண்டித்தார் எனவும் இதனிடையே ஜெயராஜிற்கும் தனலெட்சுமிக்கும் ஒரு பெண்குழந்தை பிறந்தது எனவும் அதன்பிறகும் ஜெயராமனும் தனலெட்சுமியும் கள்ளத் தொடர்பை தொடர்ந்தார்கள் எனவும் கடந்த 11.01.2025 ம் தேதி வெளியூருக்கு வேலைக்கு சென்றுவிட்டு இரவு ஜெயராஜ் வீட்டிற்கு வந்தார் எனவும் இரவு 11.00 மணியளவில் குடிபோதையில் வந்த ஜெயராமன், ஜெயராஜிடம் வீட்டிற்குள் சென்று சண்டைபோட்டான் எனவும் நானும் அம்மாவும் ஓடிச்சென்று சமாதானம் செய்தோம் எனவும் என் அம்மா ஜெயராமனை தன் வீட்டிற்கு அழைத்து வந்து படுக்க வைத்தது எனவும் விடியற்காலை 3.30 மணியளவில் என் அம்மா வெளியில் போய்விட்டு திரும்ப வீட்டிற்கு வந்து என்னிடம் உன் அண்ணன் ஜெயராஜ், ஜெயராமனை வெட்டி கொன்றுவிட்டான் என சொன்னதும் நான் போய் பார்த்தபோது ஜெயராமன் கழுத்தில் வெட்டுப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தான் எனவும் நானும் என் அம்மாவும் காவல் நிலையம் சென்று 12.01.2025 ம் தேதி போலீசில் என் அம்மா புகார் கொடுத்தார் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரி என் அண்ணன் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரியை காப்பாற்றுவதற்காக தற்போது

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.13 14:35:17 +0530

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:35:22 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.136/2025**

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தனலெட்சுமி | Husband's Name | : | ஜெயராஜ் |
| Village | : | தியானபுரம் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 22 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 13th day of March 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் தியானபுரத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். ஆஜர் எதிரி என் கணவர். இவ்வழக்கில் இறந்த ஜெயராமன் என் கொழுந்தனார். ஜெயராமன் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. ஜெயராமன் என் மாமியார் வீட்டில் கழுத்தறுக்கப்பட்டு இறந்து கிடந்தார். போலீசார் விசாரித்தார்கள்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:35:28 +0530

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் என் மாமியார் வாசன் ஹோட்டலில் வேலை செய்து வருகிறார் எனவும் என் கணவர் ஜெயராஜூடன் தனியாக வசித்து வருகிறேன் எனவும் என் பக்கத்து வீட்டில் என் கொழுந்தனார் ஜெயராமன் அவர் அம்மாவுடன் தனியாக வசித்து வருகிறார் எனவும் ஜெயராமனுக்கு திருமணம் ஆகவில்லை எனவும் ஜெயராமனுக்கும் எனக்கும் ஏற்கனவே பழக்கம் எனவும் இது தெரியாமல் ஜெயராஜ் என்னை காதலித்து திருமணம் செய்து கொண்டார் எனவும் என் கணவர் ஜெயராஜ் வெல்டிங் வேலை தொடர்பாக அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவார் எனவும் இதை ஜாதகமாக பயன்படுத்திக் கொண்ட நானும் ஜெயராமனும் கள்ளத் தொடர்பில் இருந்து வந்தோம் எனவும் இதை தெரிந்து கொண்ட என் மாமியாரும் நாத்தனாரும் என் மூத்த கொழுந்தனார் ஜெயபிரதாப்பும் எங்கள் இருவரையும் பலமுறை கண்டித்தார்கள் எனவும் நாங்கள் இருவரும் இதை பொருட்படுத்தவில்லை எனவும் இதுபற்றி அரசல் புரசலாக தெரிந்த என் கணவர் ஜெயராஜ் என்னை கண்டித்தார் எனவும் இதனிடையே எனக்கும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:35:34 +0530

ஜெயராஜிற்கும் ஒரு பெண்குழந்தை பிறந்தது எனவும் அதன்பிறகும் நானும் ஜெயராமனும் கள்ளத் தொடர்பை தொடர்ந்தோம் எனவும் கடந்த 11.01.2025 ம் தேதி வெளியூருக்கு வேலைக்கு சென்றுவிட்டு இரவு என் கணவர் வீட்டிற்கு வந்தார் எனவும் இரவு 11.00 மணியளவில் குடிபோதையில் வந்த ஜெயராமன், என் கணவரிடம் வீட்டிற்குள் வந்து சண்டை போட்டான் எனவும் என் மாமியாரும் நாத்தனாரும் வந்து சமாதானம் செய்தார்கள் எனவும் என் மாமியார் ஜெயராமனை அவர் வீட்டிற்கு அழைத்து சென்று படுக்க வைத்தார் எனவும் விடியற்காலை 3.30 மணியளவில் என் மாமியார் வெளியில் போய்விட்டு திரும்ப வீட்டிற்கு சென்று பார்த்துவிட்டு என் கணவர் ஜெயராஜ், ஜெயராமனை வெட்டி கொன்றுவிட்டதாக சொன்னார் எனவும் நாங்கள் என் மாமியார் வீட்டிற்கு சென்று பார்த்தபோது ஜெயராமன் கழுத்தில் வெட்டுப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரி என் கணவர் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரியை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:35:39 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:35:46 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.136/2025**

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகையன் | Father's Name | : | தங்கவேல் |
| Village | : | தியானபுரம் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 13th day of March 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தியானபுரத்தில் வசித்து வருகிறேன். நான் திருவாரூரில் வெல்டிங் ஒர்க் ஷாப்பில் வேலை பார்க்கிறேன். 12.01.2025 ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும் சுந்தரமூர்த்தியும் என் வீட்டிற்கு அருகே உள்ள ரஷ்யா வீட்டில் ஜெயராமன் இறந்த இடத்தை போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் நான் முதல் சாட்சியாகவும்சுந்தரமூர்த்தி 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:35:53 +0530

பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**. பின் 10.50 மணியளவில் சம்பவ இடத்திலிருந்து பிராந்தி பாட்டில் 1, இரத்தம் தோய்ந்த சிமெண்ட் காரைகள், இரத்தம் தோயாத சிமெண்ட் காரைகள், இரத்தக் கறை படிந்த மூட்டிய வேஷ்டி 1, இரத்தக் கறை படிந்த கோரை பாய் 1 ஆகியவற்றை போலீசார் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் சுந்தரமூர்த்தி 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3**. மேற்படி அயிட்டங்கள் முறையே **சா.பொ.1 முதல் சா.பொ.5**. போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

ஊர்காரர்களாகிய நாங்கள் காவல் நிலையம் சென்றபோது என்னிடம் பேப்பர்களில் கையொப்பங்கள் வாங்கி கொண்டார்கள். என்னை சாட்சியாக வைத்து போலீசார் எந்த தடய பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:36:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.136/2025

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தெட்சிணாமூர்த்தி | Father's Name | : | நாகராஜன் |
| Village | : | தியானபுரம் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 26 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 13th day of March 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தியானபுரத்தில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரி மற்றும் இவ்வழக்கில் இறந்த ஜெயராமனை தெரியும். 12.01.2025 ம் தேதி வெட்டிக் கொலை செய்யப்பட்ட ஜெயராமனின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்தபோது நான் சாட்சியாக இருந்தேன். முதல் நாள் இரவு வீட்டில் படுத்து தூங்கி கொண்டிருந்த ஜெயராமனை யாரோ வெட்டி கொலை செய்துவிட்டதாக கேள்வி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:36:07 +0530

பட்டேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில்தான் என்னை போலீசார் விசாரித்தார்கள்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:36:13 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.